மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அ.வ.எண். 59/2017

பெயர் – முருகன் (வா.சா.1)

நாள் – 20.01.2023

7ம் பிரதிவாதி தரப்பில் செய்யப்பட்ட கு.வி.

நான் எங்கு குடியிருக்கிறேன் என்றால் ஏழாயிரம்பண்ணை கிராமத்தில் உள்ள சங்கரபாண்டியாபுரம் கிராமத்தில் குடியிருக்கிறேன். தபசில் சொத்து எங்கு உள்ளது என்றால் ஏழாயிரம்பண்ணையில் உள்ள சேவகாரன்பட்டியில் உள்ளது. தபசில் சொத்துக்கான நான்கு மால் தெரியுமா என்றால் தெரியாது. தபசில் சொத்துக்கான சர்வே எண் என்ன என்றால் எனது அம்மா பெயரில் உள்ள சொத்துக்கான சர்வே எண்.86 என்று நினைவுகிறேன். அப்பா பெயரில் உள்ள சொத்துக்கான சர்வே எண் என்ன என்றால் ஞாபகம் இல்லை. வண்டிப்பாதைக்கான சர்வே எண் என்ன என்றால் பாதைக்கான சர்வே எண் எவ்வாறு உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்பது தெரியவில்லை. நான் என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் பாதை இல்லை என்று தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் பாதை இருப்பதாக ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. மாண்பமை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நான் தாக்கல் செய்திருந்த ரிட் மனுவில் பாதை இருப்பதை நான் ஒப்புக்கொண்டதாலும் 6ம் பிரதிவாதி பாதை இருப்பதாக சொல்வதாகவும் 7ம் பிரதிவாதி அந்த வண்டிப்பாதையில் பழக்கத்தில் வைத்திருப்பதாக சொன்னதாலும் மாண்பமை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் அந்த ரிட்மனு முடிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மாண்பமை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் ரிட் மனு முடிக்கப்பட்டதால் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த வழக்கு முன்தீர்ப்பு தடையால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பயர் ஆபிஸ் கட்டும்போதே நான் தாவா செய்தேன். ஆரம்பத்தில் இருந்தே பலவருடங்களாக வண்டிப்பாதை இருப்பதால் அரசு ஆவணங்களில் அந்த வண்டிப்பாதை உட்பிரிவு செய்யப்பட்டு சர்வே எண்.16/2 என வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் எனது சொத்துக்கு எந்த வழியாக செல்கிறேன் என்றால் பள்ளிக்கூடம் வழியாக உள்ளே வந்து மேல்பக்கம் உள்ள வண்டிப்பாதை அது ஒத்தையடி பாதையாகும். அதன்வழியாக செல்கிறேன். நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை அளந்து வண்டிப்பாதை இருப்பதாக

அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் அந்த ஆணையர் அறிக்கை தவறானது ஆகும். வண்டிப்பாதையானது எனது சொத்துக்கு நடுவில் செல்கிறது என்றால் சரிதான். கமிஷர் தாக்கல் செய்த வரைபடத்தில் வண்டிப்பாதையான சர்வே எண்.16/2 ல் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். ஆனால் அது தவறானது ஆகும். சங்கரபாண்டியபுரம் கிராமத்தில் இருந்து கிழக்கு புறத்தில் உள்ள சேர்வைகாரன் கிராமம் வரை சர்வே எண்.13, 12, 14, 15, 16, 17, 39, 35 வழியாக தொடர்ந்து உட்பிரிவு செய்யப்பட்ட வண்டிப்பாதையாகத்தான் உள்ளது என்றால் சரியல்ல. அந்த வண்டிப்பாதை பலவருடங்களாக இருப்பதால் தான் அதில் நானும் மற்ற நபர்களும் அந்த வண்டிப்பாதையை பயன்படுத்தி வருகிறோம் என்றால் சரியல்ல. 40 ஆண்டுகாலமாக நாங்கள் வண்டி எதனையும் போகவிடாமல் மேற்குபக்கமாக சென்று வருகிறார்கள். அந்த வண்டிப்பாதையை பயன்படுத்தி வருகிறார்கள் என்றலும் நாங்கள் தான் பொதுமக்கள் பயன்படுத்துவதை தடுத்து வருகிறோம் என்றால் சரியல்ல. அந்த வண்டிப்பாதை 7ம் பிரதிவாதியின் நிலத்திற்கு செல்லக்கூடிய வண்டிப்பாதை என்றால் சரியல்ல. அந்த வண்டிப்பாதை 7ம் பிரதிவாதியின் நிலத்திற்கு செல்லக்கூடிய வண்டிப்பாதை என்றாலும் அந்த வண்டிப்பாதையாகத்தான் 7ம் பிரதிவாதி டிராக்டர், வண்டி, வாகனங்களை கொண்டுசென்று வருகிறார் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.